ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை

SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD

EDB SRI LANKA

**கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு**

# SEAFOOD EXPO GLOBAL
# SEAFOOD EXPO GLOBAL, (SEG)
# BARCELONA, SPAIN
# 20TH -22ND APRIL 2027

2027 ஏப்ரல் 20 முதல் 22 வரை ஸ்பெயினின் பார்சிலோனாவில் நடைபெறவிருக்கும் SEG 2027 கண்காட்சியில் இலங்கையின் பங்கேற்பை ஒழுங்கு செய்தல்.

SEG என்பது உலகிலேயே மிகப்பெரிய கடல் உணவு நிகழ்வாகும், இது 156 நாடுகளைச் சேர்ந்த 35,300க்கும் மேற்பட்ட கடல் உணவுத் துறை நிபுணர்களை இணைக்கிறது. இது உலகளாவிய கடல் உணவு சந்தையாகச் செயல்படுகிறது என்பதுடன் இதில் பல பிரிவுகளைக் கொண்ட சில்லறை விற்பனை மற்றும் உணவு சேவை நிறுவனங்களின் பெருமளவு கடல் உணவு வாங்குபவர்கள் உட்பட நூற்றுக்கணக்கான முக்கிய கொள்வனவாளர்களை ஈர்க்கிறது.

**யாருக்காக**

சர்வதேச தரநிலைகளைப் பின்பற்றி, உலகளாவிய சந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறன் கொண்ட மீன் மற்றும் மீன் உற்பத்திகளின் ஏற்றுமதியாளர்கள், பதப்படுத்துபவர்கள் மற்றும் சாத்தியமான ஏற்றுமதியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் (EDB) உதவி**

கண்காட்சி இடத்திற்கான செலவு, விற்பனைக் கூட நிர்மாணம் மற்றும் பிற அனைத்துத் தொடர்புள்ள செலவுகளையும் பங்கேற்கும் நிறுவனங்களே ஏற்க வேண்டும். நிதி வசதியைப் பொறுத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு இடத்திற்கான செலவு மற்றும் விற்பனைக்கூட நிர்மாணச் செலவில் ஒரு பகுதிக்கு நிதி உதவி வழங்குவது பற்றி EDB கவனத்திற் கொள்ளலாம்.

**விண்ணப்பம் மற்றும் தெரிவு**

விண்ணப்பங்கள் EDB ஏற்றுமதி விவசாயப் பிரிவில் (6வது மாடி) கிடைக்கும் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது www.srilankabusiness.com என்ற இணையதளத்தில் “Announcements” என்ற பிரிவின் கீழ் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கடித உறையின் மேல் இடதுபுற மூலையில் “Seafood Expo Global 2027” எனக் குறிப்பிட்டு, பதிவுத் தபால் மூலம் 2026 செப்டெம்பர் 14ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் - ஏற்றுமதி விவசாயம், EDB அவர்களுக்குக் கிடைக்கச்செய்ய வேண்டும். இந்நிகழ்ச்சிக்கு ஏற்ற பங்கேற்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக, குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் EDB யினால் நியமிக்கப்பட்ட குழுவினால் நேர்முகத் தெரிவிற்கு உட்படுத்தப்படுவர்.

மேலதிக விவரங்களுக்கு தயவுசெய்து செல்வி யமுனா சுமனரத்ன / உதவிப் பணிப்பாளர் அவர்களை 011-2300732, 2300705-11, நீடிப்பு 388 ஆகிய இலக்கங்களில் தொடர்புகொள்ளவும். மின்னஞ்சல்: yamuna@edb.gov.lk.

**தலைவர்/பிரதான நிறைவேற்று அதிகாரி**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, (EDB)**

**NDB - EDB கோபுரம், 42, நவம் மாவத்தை, கொழும்பு 02**

**இணையதளம்: www.srilankabusiness.com**